## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 299/2020.
Prosecution witness for P.W.5.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. பாக்கியராஜ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2025.

Accused are present.

முதல் விசாரணை

நான் தற்போது நாட்டார்குளத்தில் குடியிருந்து கட்டுமானத் தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன குரு என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டார்குளத்தில் எங்கள் வீட்டின் அருகில் நான் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும்போது மேற்படி குருவின் மகன் டோனி என்பவர் என்னிடம் வந்து அவரது தகப்பனாரை யாரோ அடித்துவிட்டதாக சொன்னார். அப்போது மணி இரவு 9 மணிக்கு மேல் இருக்கும். நான் வெளியே வந்து பார்க்கும்போது இருட்டாக இருந்தது. தெரு விளக்கு வெளிச்சம் எதுவும் இல்லை. அப்போது மேற்படி குரு தரையில் படுத்திருந்தார். நான் குருவின் அண்ணனான அ.சா1 க்கு கைபேசி மூலம் தொடர்ப்பு கொண்டு அவர் போலீசுக்கு தகவல் சொன்னார். அதன்பின்னிட்டு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி குரு என்ன நிலையில் எப்படி படுத்துக் கிடந்தார் என்றால் நான் அதை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 12.12.2018 அன்று இரவு 9 மணியளவில் நான் வீட்டில் இருக்கும்போது பயங்கர சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது மேற்படி குரு வெட்டுக்காயங்களுடன் அவரது வீட்டிற்கு முன்பாக கிடந்ததாகவும், எதிரிகள் குருவை வெட்டிவிட்டு கையில் ஆளுக்கு ஒரு அரிவாளுடனும் அங்கு நின்று கொண்டிருந்ததாகவும், எதிரிகள் எங்களை பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் விசாரித்தபோது பொது குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிக்கும் பிரச்சனையில் குருவை எதிரிகள் வெட்டிக் கொன்றுவிட்டதாக நான் தெரிந்து கொண்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

நான் தகவல் சொல்லி அ.சா.1 அங்கு வந்தார். அ.சா.1 கைபேசி மூலம் தகவல் சொல்லி போலீசார் அங்கு வந்தார்கள். இரவு 9.30 மணியளவில் போலீசார் அங்கு வந்து பிரேதத்தை ஆம்புலன்ஸ் மூலம் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.17 17:11:54 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 299/2020.

Prosecution witness for P.W.6.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. தமிழரசன். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2025.

Accused are present.

முதல் விசாரணை

நான் தற்போது நாட்டார்குளத்தில் குடியிருந்து டாடா ஏசிஇ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். இறந்துபோன குரு என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 12.12.2018 அன்று இரவு 9 மணியளவில் நான் வீட்டில் இருக்கும்போது பயங்கர சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது மேற்படி குரு வெட்டுக்காயங்களுடன் அவரது வீட்டிற்கு முன்பாக கிடந்ததாகவும், எதிரிகள் குருவை வெட்டிவிட்டு கையில் ஆளுக்கு ஒரு அரிவாளுடனும் அங்கு நின்று கொண்டிருந்ததாகவும், எதிரிகள் எங்களை பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்னர் விசாரித்தபோது பொது குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிக்கும் பிரச்சனையில் குருவை எதிரிகள் வெட்டிக் கொன்றுவிட்டதாக நான் தெரிந்து கொண்டதாகவும்

சொல்லியுள்ளேன் என்றும், தற்போது எதிரிகள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்பதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

## குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.04.17 17:12:08 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 299/2020.
Prosecution witness for P.W.7.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **செல்வன். டோனி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2025.

Accused are present.

**நீதிமன்ற கேள்விக்கான பதில்**

நான் தற்போது வந்துள்ள இடம் நீதிமன்றம். சாட்சி நீதிபதியை பார்த்து தாங்கள் நீதிபதி என்று கூறுகிறார். வழக்கறிஞர்களை பார்த்து அவர்கள் வழக்கறிஞர்கள் என்று கூறுகிறார். நான் தற்போது நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன். சாட்சி சொல்லி வழக்கை நடத்தினால் எதிரிகளை சிறையில் அடைத்துவிடுவார்கள். மேற்படி சங்கதிகளை தெரிந்து கொண்டுதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி சங்கதிகளின் அடிப்படையில் சாட்சி சாட்சியம் அளிக்கும் தன்மையை புரிந்துகொண்டுதான் சாட்சியம் அளிக்கிறார் என்பதை அறிந்து கொண்டதால் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நொச்சிகுளத்தில் குடியிருந்து ஏழாம் வகுப்பு படித்து வருகிறேன். இறந்துபோன குரு என் தகப்பனார். அ.சா.1 என் பெரியப்பா. ஆஜர் எதிரிகளை தெரியும். 12.12.2018 அன்று மாலை 6 மணியளவில் நானும், என் தகப்பனாரும் இருசக்கர வாகனத்தில் நொச்சிகுளத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு சென்றோம். அப்போது என் தகப்பனார் என் பெரியப்பா மற்றும் அத்தை ஆகியோருடன் எங்கள் வீட்டு வாசலில் பேசிக் கொண்டிருந்தார்.

மீண்டும் என் தகப்பனார் என்னை கிருஷ்ணாபுரத்திற்கு சாப்பிட அழைத்துச் சென்றார். சாப்பிட்ட பிறகு மீண்டும் என்னை ஊருக்கு அழைத்து வந்தார். அப்போது இரவு சுமார் 8.50 மணியிருக்கும். இருசக்கர வாகனத்தை என் தகப்பனார் வீட்டு வாசலில் நிறுத்தினார். நான் இருசக்கர வாகனத்தில் முன்புறமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். பின்னால் ஏதோ சத்தம் கேட்டது. பக்கத்து வீட்டில் உள்ள ஆஜர் எதிரிகள் ஆளுக்கொரு அரிவாளுடன் வந்து உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி என் தகப்பனாரை வெட்டிவிட்டார்கள். 3ம் எதிரி என்னை இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே தள்ளிவிட்டு என் வாயை பொத்திக் கொண்டார். பிறகு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அப்போது என் தகப்பனார் இறந்துவிட்டார். என் தகப்பனாருக்கு பின்னந்தலையிலும், பின்னங்கழுத்திலும் வெட்டுக்காயம் இருந்தது. வலது தோள்பட்டையிலும், மூக்கிலும், இடது முழங்காலிலும் வெட்டுக்காயங்கள் இருந்தது. குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிக்கும் பிரச்சனையில் என் தகப்பனாரை எதிரிகள் வெட்டிவிட்டார்கள். போலீசார் என்னை மறுநாள் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பவ சமயத்தில் என் வயது 5. இந்த வழக்கு சம்பவ காலத்திலிருந்து இன்றைய வரையில் என் தாயாருடன்தான் வசித்து வருகிறேன். கடந்த ஏழு ஆண்டுகளாக இந்த எதிரிகள்தான் என் தகப்பனாரை வெட்டியதாக என் தாயார் என்னிடம் பேசினாரா என்றால் இல்லை. நான் என் தாயாருடன் நீதிமன்றத்திற்கு தற்போது வந்தேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் நான் கைக்கடிகாரம் கட்டவில்லை. அதனால் 8.50, 7.30, 4.40 ஆகிய மணிகள் எனக்கு தெரியாது. அதனால் இரவு 8.50 மணி என்று யார் சொன்னார்கள் என்றால் யாரும் சொல்லவில்லை நானாக சொல்கிறேன். போலீசார் இரவு 11 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இரவு 11 மணி என்பது நான் கைகடிகாரம் கட்டவில்லை என்பதால் அப்போது எனக்கு

தெரியாது. தற்போதும் இரவு 11 மணி என்று யாரும் எனக்கு சொல்லி கொடுக்கவில்லை. வெட்டு விழும்போது நான் இருசக்கர வாகனத்தில் முன்னால் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது நீலநிற சட்டையும், அரைக்கால் சட்டையும் அணிந்திருந்தேன். என் தகப்பனாருக்கு நிறைய வெட்டுக்காயங்கள் இருந்தது. என் சட்டையிலும், அரைக்கால் சட்டையிலும் ஏராளமான ரத்தம்பட்டது. என்னுடைய ரத்தம்பட்ட உடைகளை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அவர்கள் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை. மேற்படி உடைகளில் ரத்தம்படியவில்லை என்பதால்தான் போலீசார் என்னை கேட்கவும் இல்லை. நான் கொடுக்கவும் இல்லை என்று பயிற்சி எடுத்துக் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விடியற்காலை 4 மணியளவில் பிரேதத்தை போலீசார் எடுத்துச் சென்றார்கள். சம்பவம் நடந்த அன்றே இரவு 9.30 மணியளவில் என் தகப்பனாரின் பிரேதத்தை போலீசார் ஆம்புலன்சில் எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் என்னை என் தகப்பனார் எங்கும் அழைத்துச் செல்லவில்லை என்றும், எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.5–ஐ எனக்கு தெரியும். நான் வீட்டில் இருக்கும்போது சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல. எனக்கு என்ன நடந்தது என்று தெரியாததால் சத்தம்கேட்டு நான் வீட்டிலிருந்து வெளியே வந்து அ.சா.5 வீட்டை தட்டி என் தகப்பனாரை யாரோ அடித்துபோட்டுவிட்டதாக நான் சொன்னதாக சொன்னால் அது சரியல்ல. என்னுடைய 5 வயதில் நடந்ததாக சொல்லும் சம்பவம் எனக்கு அடிக்கடி சொல்லி கொடுக்கப்பட்டு நான் பயிற்சி எடுத்து பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN

Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.17 17:12:21 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 299/2020.
Prosecution witness for P.W.8.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. உஷா. | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.04.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது நாட்டார்குளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்துபோன குரு என் கணவர். அ.சா.7 என் மகன். அ.சா.1 என் கணவரின் அண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு எங்கள் வீட்டின் வாசலில் உள்ள பொது குடிநீர் குழாயில் ஹோஸ் போட்டு நான் தண்ணீர் பிடித்தேன். அப்போது 1, 2 எதிரிகள் தண்ணீர் இனிமேல் பிடிக்கக்கூடாது என்று சொன்னார்கள். நான் சரி என்று விட்டுவிட்டேன். அதுகுறித்து 1, 2 எதிரிகள் என்னிடம் வம்பு இழுத்தார்கள். அதுகுறித்து என் கணவரிடம் சொன்னேன். அதற்கு 1, 2 எதிரிகள் என் கணவரிடம் பிரச்சனை செய்தார்கள். 01.06.2018 அன்று என் கணவரும், என் அண்ணன் ஜெயபாலும் எங்கள் வீட்டிற்கு சுமார் 8.30 மணியளவில் வந்தார்கள். அப்போது 1ம் எதிரி என் கணவரை பார்த்து உன் பெண்டாட்டியை அடக்கி வைக்கத்தெரியாதா கூதிமவனே என்று சொல்லி வம்பிழுத்து என் கணவரையும், என் அண்ணனையும் கம்பால் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார்கள். இருவரையும் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள். என் கணவர்மீது பொய் வழக்கு பதிவு செய்தார்கள். இருதரப்பினர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அங்கு இருந்தால் பிரச்சனை வரும் என்று சொல்லி என் கணவரை அழைத்துக்

கொண்டு நொச்சிகுளத்திற்கு என் தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டோம். கிறிஸ்துமஸ் வருவதால் ஊருக்கு போவோம் என்று என் கணவர் சொன்னார். நான் வேண்டாம் என்று சொன்னேன். நாங்கள் அவ்வப்போது எங்கள் வீட்டிற்கு வரும்போது எதிரிகள் முறைப்பதும் சாடைமாடையாக பார்ப்பதுமாக இருந்தார்கள். ஊருக்கு போவோம் என்று சொல்லி தண்ணீர் பிரச்சனை வந்ததால் மோட்டார் வாங்கலாம் என்று என் கணவர் சொன்னார். 10.12.2018 திங்கள் கிழமை அன்று எதிரிகள் என் கணவரை பார்த்து மோட்டாரை மாட்டிவை உன்னை துண்டு துண்டாக என்றைக்கு இருந்தாலும் வெட்டத்தான் போறோம் என்று சொல்லி மிரட்டினார்கள். ஊரில் இருப்பவர்கள் சத்தம்போட்டு சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டார்கள். என் கணவர் வீட்டிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக வேலையைப் பார்த்து வந்தார். 12.12.2018 அன்று என் கணவர் அ.சா.7–ஐ அழைத்துக் கொண்டு ஊருக்கு போவதாக என்னிடம் சொன்னார். நான் சரி என்று சொன்னேன். இரவு 9.15 மணியளவில் ஊரிலிருந்து எனக்கு கைபேசி அழைப்பு வந்தது. என் கணவரை எதிரிகள் வெட்டி வாசலில் கொன்றுவிட்டதாக தகவல் கிடைத்தது. நான் மேற்படி ஜெயபாலை அழைத்துக் கொண்டு நாட்டார்குளத்திற்கு சென்றேன். நான் பார்க்கும்போது என் கணவருக்கு வலது கழுத்தின் பின்பகுதியிலும், தலையின் பின்பகுதியிலும், வலது தோள்பட்டையிலும், மூக்கின்மீதும், இடது முழங்காலிலும் வெட்டுக்காயங்கள் இருந்தது. பிறகு போலீசார் வந்து இரவு சுமார் 11.15 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். நான் மயங்கிவிட்டதால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எங்கள் வீட்டின் பின்புறமாக மனுவேல் மகன் பாக்கியராஜ் என்பவர் குடியிருக்கிறார். மேற்படி பாக்கியராஜ் தன்னை இறந்துபோன என் கணவரும், அ.சா.1–ம் வெட்டி விட்டதாக அந்த வழக்கிற்கு இருவரும் நீதிமன்றத்திற்கு

சென்று வந்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அது பொய் வழக்கு. அந்த வழக்கில் மேற்படி பாக்கியராஜிக்கும், எனக்கும் தொடர்பு இருந்ததாக சொல்லி மேற்படி பாக்கியராஜை இருவரும் வெட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தண்ணீர் பிரச்சனை சம்பந்தமாக எதிரிகளுக்கும், எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் இரவு சுமார் 9.15 மணியளவில் நாட்டார்குளத்திற்கு வந்தோம். அப்போது நான் என் கணவரை பார்த்து மயங்கி விழுந்துவிட்டேன். இரவு 12 மணிக்கு மேல் எனக்கு மயக்கம் தெளிந்தது. போலீசார் சுற்றி இருந்தார்கள். நொச்சிகுளத்திற்கும், நாட்டார்குளத்திற்கும் இடையே சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். நான் தகவல் கேள்விப்பட்டு என் அண்ணன் ஜெயபாலுடன் இருசக்கர வாகனத்தில் வந்தேன். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் நாட்டார்குளத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அ.சா.7 –க்கு 5 வயதிருக்கும்போது இந்த வழக்கு சம்பவம் நடந்தது. அதற்கு முன்பிருந்தும், அதற்கு பிறகும் அ.சா.7 என்னுடன்தான் வசித்து வருகிறார். இந்த வழக்கு சம்பவத்திற்கு பிறகு வழக்கு சம்பவம் குறித்து அ.சா7 உடன் நான் எப்போதும் பேசிக் கொண்டதில்லை. நான் ஏழு ஆண்டுகளாக இந்த வழக்கில் சாட்சி சொல்லி அ.சா.7–ஐ தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.04.17 17:12:34 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.